தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,**
**தேனாம்பேட்டை, சென்னை- 600 018. தொலைபேசி எண்: 24347590**

<u>ஆணை நாள் 10.11.2020</u>

**<u>முன்னிலை</u>**

## முனைவர் ரா.பிரதாப்குமார்

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். SA 4021/B/2018</u>**

திரு. K. சுப்ரமணி — மேல்முறையீட்டாளர்

எதிர்

பொது தகவல் அலுவலர்,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
ஊராட்சி ஒன்றியம், குன்னூர்,
நீலகிரி மாவட்டம். — பொது அதிகார அமைப்பு

**<u>ஆணை</u>**

COVID-19 காரணமாக தமிழ்நாடு அரசால், ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை மேற்கொள்ள இயலாததால், இன்று (10.11.2020) தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் இன்றைய தின விசாரணையில் மனுதாரர், திரு. க.சுப்பிரமணி அவர்களின் வழக்கறிஞர் யஷ்வந்த் அவர்களும் பொது தகவல் அலுவலர் மற்றும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர், குன்னூர் ஊராட்சி ஒன்றியம், நீலகிரி மாவட்டம் அவர்களும் விசாரணையில் கலந்து கொண்டார்கள்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)ன் கீழ் அளிக்கப்பட்ட தனது 6.1.2018 நாளிட்ட மனுவில், குன்னூர் வட்டம், வண்டிச்சோலை பஞ்சாயத்துக்குட்பட்ட கிராமத்தில் 2013 முதல் 2017 வரை உள்ள ஆண்டுகளில் கட்டப்பட்ட கட்டிடங்களுக்கான வரைபட திட்ட அனுமதி வழங்கியது தொடர்பாக தகவல் கோரி குன்னூர் ஊராட்சி ஒன்றியம், துணை வட்டார வளர்ச்சி அலுவலருக்கு விண்ணப்பித்துள்ளார்.

3. பொது தகவல் அலுவலரிடமிருந்து தகவல் எதுவும் பெறப்படாத நிலையில், 21.2.2018 தேதியிட்டு, தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டு அலுவலருக்கு விண்ணப்பித்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரிடமிருந்தும் பதில் எதுவும் கிடைக்கப் பெறாததால் மனுதாரர், 29.5.2018 தேதியிட்டு, இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டின் அடிப்படையில் தொலைபேசியின் வாயிலாக இன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர் தனக்கு இதுவரை எந்தவித தகவல்களும் வழங்கப்படவில்லை என்றும், தகவல் வழங்காத பொது தகவல் அலுவலர் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், வாதத்தின்போது ஆணையத்தில் தெரிவித்தார். இன்றைய விசாரணையில் ஆஜரான பொது தகவல் அலுவலர், பதிவு அஞ்சல் மூலம் தான் மனுதாரருக்கு தகவல் அனுப்பியிருப்பதாக தெரிவித்தார். மனுதாரருக்கு உரிய தகவலை அனுப்பிவிட்டு, அதன் நகலினை மின் அஞ்சல் மூலம் ஆணையத்திற்கும் அனுப்பியுள்ளார். மனுதாரருக்கு உரிய தகவல் பொது தகவல் அலுவலரால் அளிக்கப்பட்டபோதும், மேற்சொன்ன மனுதாரர் மற்றும் பொதுத் தகவல் அலுவலர் ஆகியோர் பேசப்பட்ட வாதங்களை பரிசீலனை செய்து இன்றைய விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது:-

**சட்டப்பிரிவு 7ன்படி விண்ணப்பத்தை பெற்ற 30 தினங்களுக்குள் மனுதாரர் கேட்டுள்ள தகவல்களை முழுமையாக பொது தகவல் அலுவலர் தரக் கடமைப்பட்டவராவார். இந்நிலையில் பொது தகவல் அலுவலர் ஏன் 30 தினங்களுக்குள் தகவலை மனுதாரருக்கு வழங்க தவறினார் என்பதற்கும் காலதாமதமாக தகவல் ஏன் அளிக்கப்பட்டது என்பதற்கும் பொது தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 20(1)ன்கீழ் அதிகபட்ச தண்டமாக ரூ.25,000/- ஏன் விதிக்கக் கூடாது என்பதற்கும் எழுத்து மூலமான விளக்கங்களை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்குமாறு இன்றைய விசாரணையில் தொலைபேசியின் வாயிலாக ஆஜரான பொது தகவல் அலுவலர் திருமதி விஜயா, துணை வட்டார வளர்ச்சி குன்னூர் ஊராட்சி ஒன்றியம், நீலகிரி மாவட்டம் அவர்களுக்கு இதன்மூலம் உத்திரவிடப்பட்டு, இவ்வழக்கின் விசாரணை முற்றாக்கப்படுகிறது.**

**ஒம்/-ரா.பிரதாப்குமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண்.SA/4021B/2018**

பெறுநர்
பொது அதிகார அமைப்பு
பொது தகவல் அலுவலர்,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
குன்னூர் ஊராட்சி ஒன்றியம்,
நீலகிரி மாவட்டம்.

மனுதாரர்
திரு. க.சுப்பிரமணி, த/பெ ச.கருப்பையா,
2/74, தெற்குத் தெரு, பட்டம் புதூர்,
விருதுநகர் - 626 003.

Copy to: File
SSPA-16.11.2020